சுற்று நிருப இலக்கம் : 03/2017

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு (மே.மா.)
இலக்கம் : 109, 4 ஆம் மாடி,
பிரதான வீதி,
பத்தரமுல்ல.
2017.03.31

மேல் மாகாணத்தின் அனைத்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்,
மாவட்ட கிராமிய வங்கி ஒன்றியங்கள், சணச சங்கங்கள், மாவட்ட கூட்டுறவுச் சபைகள் மற்றும்
ஏனைய அனைத்து பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கும்,

**மேல் மாகாண கூட்டுறவுச் சங்கங்களில் தற்காலிக, அமைய அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களை நிரந்தரமாக்குதல்.**

மேல் மாகாணத்தின் சில கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊழியர்களை ஆட் சேர்ப்புச் செய்வதில் கூட்டுறவு ஆணைக்குழு ஒழுங்கு விதிகளைப் பின்பற்றாது முறைசாரா விதத்தில் ஆட் சேர்ப்புச் செய்வதன் காரணமாக அப்பதவிகளை வகிக்கும் ஊழியர்கள் தமது பதவிகளில் நிரந்தரமாக்கப்பட இயலாமல் பாரிய அசௌகரியங்களுக்கு முகங் கொடுப்பதனால், ஊழியர்கள் இவ்வாறான நிலைமைகளிற்கு முகங் கொடுக்காதிருக்கும் விதமாக பணிப்பாளர் சபை செயற்படல் அவசியமாகும் என அழுத்தமாக தெரியப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அவசியமாகின்றது

கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு சுற்று நிருபம் இலக்கம் 02/2010 இன் பதவி வகைப்படுத்தல்களுக்கு ஏற்ப, **கனிஷ்ட மற்றும் வழிநடாத்தல் தரத்திலான பதவிகளுக்காக** அவ்வாறு தற்காலிக மற்றும் அமைய அடிப்படையில் முறைசாரா விதத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள ஊழியர்கள், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்வார்களாயின், அவர்களது நியமனத்தை அங்கீகரிப்பதற்கு இவ்வாணைக் குழு தீர்மானித்துள்ள அதேவேளை, அதற்குத் தேவையான விதப்புரைகளை ஏற்பாடு செய்தல் இச் சுற்று நிருபத்தின் நோக்கமாகும்.

02. அதற்கேற்ப, கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் அனைத்து தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களதும் நியமனங்களை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், அது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள, coopec I மாதிரிப் படிவம் மற்றும் அம்மாதிரிப் படிவத்திற்கு அமைய சமர்ப்பிக்கப்பட வேண்டிய இணைப்புகள் மற்றும் ஆவணங்களுடன் உங்களது விண்ணப்பம், 2017.07.31 ஆம் தேதிக்கு முன்னர் இந்த ஆணைக் குழுவிற்கு கிடைக்கக் கூடியதாக ஏற்பாடுகளை மேற் கொள்ளல் அவசியம் என்பதை அன்புடன் தெரியப்படுத்துகிறேன்.

i. வலிதான ஆளணி மதிப்பீட்டிற்கமைய அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் காணப்படல் வேண்டும்.

ii. அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு உட்பட்ட, தற்போது வெற்றடம் நிலவுகின்ற பதவியில் 2016.12.31 ஆம் தேதிக்கு (கடமை புரியும்) ஆகக் குறைந்தது 180 நாட்கள் திருப்திகரமாகவும் தொடராகவும் கடமையில் ஈடுபட்டிருத்தல் அவசியமாவதுடன் பதவிக்குரிய தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் அவசியம். விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ள தினங்களிலும் கடமை புரிய வேண்டிய பதவியொன்றில் கடமை புரியும் அலுவலர் ஒருவர் அத் தினங்களிலும் கடமையாற்றிய நாட்களின் எண்ணிக்கையும் இந் 180 நாட்களைக் கணிப்பதில் கருத்திற் கொள்ளல் அவசியமாகும்.

iii. பதவிகளுக்கு ஆட் சேர்ப்புச் செய்வதில் அப்பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட தகுதிகள் பூர்த்தி செய்யப்படவில்லையாயின் உரிய சங்கத்தின் அப்பதவியில் 03 வருடங்களிற்கு தொடராக திருப்திகரமான (2016.12.31 ஆந் தேதிக்கு) தற்காலிகமாகவோ அல்லது அமைய அடிப்படையிலோ கடமையாற்றியுள்ள ஊழியர்களை இச்சுற்று நிருபத்திற்கேற்ப நிரந்தரமாக்க இயலும்.

iv. இச் சுற்று நிருபத்தின் கீழ் நிரந்தரமாக்குவதற்கு தகுதி பெறும் ஊழியர்களின் வயது 2016.12.31 ஆம் தேதியில் 45 வருடங்களைத் தாண்டியிருப்பினும், அவர்கள் தற்காலிக, அமைய அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் 45 வருடங்களைத் தாண்டியிராவிட்டால் இச்சுற்று நிருபத்தின் கீழ் அவர்களது நியமனம் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட முடியும்.

v. மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் இவ்வாணைக் குழுவிற்குக் கிடைப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் அவசியம்.

- சம்பந்தப்பட்ட ஊழியர்களை சேவையில் நிரந்தரமாக்குதல் தொடர்பான பணிப்பாளர் சபையின் தீர்மானம் / செயற் குழுச் சபையின் தீர்மானம்.
- பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் / சங்கப் பதிவாளரின் அனுமதி அல்லது 03 வருட காலத்தை தாண்டாத ஆளணி மதிப்பீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி.
- இணைப்பு இலக்கம் 01 (கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள், பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி, தேசிய அடையாள அட்டையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி, சேவையில் இணைத்துக் கொள்ளும் போது இணைப்புச் செய்த வேளை - சங்கத்தினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி)

6

- சங்கம் அமைந்துள்ள மாவட்டத்தில் / மேல் மாகாணத்தில் 02 வருடங்களிற்கு மேற்பட்ட காலத்திற்கு நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும், கிராம அலுவலரின் சான்றிதழ்.

- கடமை, வரவு மற்றும் நடத்தை பற்றிய முன்னேற்ற அறிக்கை

03. ஊழியர்களை ஆட் சேர்ப்புச் செய்வதில் 2016.12.31 ஆம் திகதிக்கு முன்னர் ஆட் சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தாலும் இச் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப தேவையான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ய இயலாமையினால் சேவையில் நிரந்தரமாக்கப்பட முடியாத ஊழியர்கள் மேலும் ஒரு வருட தொடரான சேவைக் காலத்திற்கு சேவையாற்றிய பின்னர் சங்கத்தினால் உரிய விண்ணப்பத்தை ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ள முடியும்.

04. 2016.12.31 ஆந் தேதிக்கு பின்னர் இணைத்துக் கொள்ளப்பட்ட எந்தவொரு ஊழியரும் இச் சுற்று நிருபத்தின் கீழ் நியமனத்தை அங்கீகரிப்பதற்கு தகுதி பெறும் அதேவேளை, கூட்டுறவு ஊழியர் ஆட்சேர்ப்பு நடைமுறை தகுதிகளின் கீழ் நேர்முகத் தேர்வொன்றின் பின்னர் அவர்களது நியமனத்தை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறே, 2017-07-31 ஆந் தேதிக்குப் பின்பு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதைக் கருத்திற் கொள்ளுமாறு தெரியப்படுத்துகிறேன்.

ஆணைக்குழுவின் நியதிகளிற்கேற்ப,

எஸ்.ஏ.எல்.ரங்கனீ
செயலாளர்
கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு
மேல் மாகாணம்

பிரதிகள் :

01. பிரதான செயலாளர், மேல் மாகாணம்.
02. செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, மேல் மாகாணம்.
03. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ சங்கப் பதிவாளர், மேல் மாகாணம்.
04. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - (கொழும்பு/கம்பஹ/களுத்துறை)
05. பணிப்பாளர், மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம்.
06. செயலாளர், மத்திய அரசின் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு.
07. அனைத்து மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுச் செயலாளர்கள்.
08. அனைத்து தொழிற் சங்கங்கள் ஒன்றியங்கள்

03/2017 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் கீழ் கூட்டுறவு ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான விண்ணப்பப் படிவம்.

முதலாம் பகுதி

I. அலுவலரின் முழுப் பெயர் :

..........................................................................................................................

II. பதவி : ..........................................................................................................................

III. முதன் முதலாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட தினம் :

..........................................................................................................................

IV. பிறந்த திகதி : ..........................................................................................

(முதன் முதலாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட தினத்தில் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் அவசியம்)

V. நிரந்தர முகவரி:

..........................................................................................................................

..........................................................................................................................

(மேல் மாகாணத்தில் 02 வருடங்களுக்கு நிரந்தர வதிப்பிடத்தை உறுதிப்படுத்தல் அவசியம்)

.................... ஆம் திகதியிலிருந்து இது வரை .............................................. கூட்டுறவுச் சங்கத்தில் .................................... பதவியில் தொடராக வருடம்.............. மாதம்.............. சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளேன் எனவும், எனக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை எனவும், எனது அறிவிற்கேற்ப எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்படவில்லை எனவும், மேற் குறித்த தகவல்கள் உண்மை எனவும் உறுதிப்படுத்தி தெரியப்படுத்துகிறேன்.

.............................................. ..............................................

திகதி அலுவலரின் ஒப்பம்

இரண்டாம் பகுதி

I. மேலே முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் திருப்தியடைகிறேன்.

II. திரு/ திருமதி/ செல்வி ........................ ஆம் திகதியிலிருந்து இது வரை இக்கூட்டுறவுச் சங்கத்தில் .................................... பதவியில் தொடராக வருடம்.............. மாதம்.............. சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளார்.

III. இச்சேவைக் காலத்தினுள் அவர் ............நாட்கள் சம்பளமற்ற லீவு பெற்றுக் கொண்டுள்ளார்.

IV. அவரிற்கெதிராக ஏதாவது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருந்தால் அது பற்றிய விபரம் :

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

திரு/ திருமதி/ செல்வி .............................................................................. இதற்கு முன்னர் எவ்வகையிலும் ஆணைக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் இல்லை எனவும், ஆளணி மதிப்பீட்டிற்கு அமைய இந்நியமனத்தை ...................... ஆம் திகதி முதல் நிரந்தரமாக்குவதற்கு ஆளணி மதிப்பீட்டிற்கு அமைய ஏற்பாடுகள் உண்டு எனவும், அதனூடாக ஏனைய ஊழியர்களின் பணி மூப்பிற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது எனவும் திருப்திப்படுகிறேன் எனவும், அவர்/ அவள்/ ........................சுற்று நிருபத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்குட்பட்டு ........................ஆம் தேதி முதல்....................................பதவிக்கு நியமிப்பதற்கு தகுதியுடையவர் எனவும், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இதனுடன் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

I. இணைப்பு (01) மாதிரிப் படிவம்

II. ஆளணி மதிப்பீடு

III. பிறப்புச் சான்றிதழ் (அத்தாட்சிப் படுத்தப் பட்ட உண்மைப் பிரதி)

IV. கிராம அலுவலர் சான்றிதழ்

V. கல்விச் சான்றிதழ் (அத்தாட்சிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதி)

VI. முதன் முதலில் இணைத்துக் கொள்ளப்பட்டதற்கான பணிப்பாளர் சபையின் தீர்மானம் மற்றும் இணைத்துக் கொண்ட போது சங்கத்தினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதம்

VII. வேலைக்கு சமூகமளித்தல், நடத்தை தொடர்பான முன்னேற்ற அறிக்கை

VIII. 03/2017 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் கீழ் நிரந்தரமாக்குவது தொடர்பான பணிப்பாளர் சபையின் தீர்மானம்/ செயற் குழுத் தீர்மானம்.

திகதி : மனிதவள முகாமையாளர் :

திகதி : பொது முகாமையாளர் :

தகதி : தலைவர் :